අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/9/15/2/3/පොදු
ඔබේ අංකය / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2022.03.11

சுற்றுநிருப இலக்கம்: 03/2022

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து அதிபர்கள்,
அனைத்து பாடசாலை விளையாட்டு சங்கத் தலைவர்கள்,

## பாடசாலை விளையாட்டு

பாடசாலை மாணவர்களின் உடலியல், உளவியல், சமூகவியல் மற்றும் ஆன்மீக ஆரோக்கியத்தை பரிபூரணப்படுத்தும் குறிக்கோளை அடையும் நோக்கில் "சகல மாணவர்களும் கட்டாயமாக ஒரு விளையாட்டில் ஈடுபடல் வேண்டும்" எனும் கருத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் இதனால் பெற்றுக்கொள்ளும் தேர்ச்சிகள் மற்றும் தகைமைகளை அளவிடுவதற்கும், நாட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்காக இச் சுற்றுநிருபம் வெளியிடப்படுகின்றது. பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்படும் ஏனைய சகல விளையாட்டுப் போட்டிகளுக்கும் இச் சுற்றுநிருபத்தின் 1.1 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள பொது விதிமுறைகள் செல்லுபடியாகும். பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல் தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட **சகல ஆலோசனைகள் மற்றும் சுற்றுநிருபங்களும் இத்துடன் இரத்துச்செய்யப்படுகின்றது.**

### 1.1 பொது விதிமுறைகள்

1.1.1 சகல பாடசாலை விளையாட்டுப் போட்டிகளிலும் இலங்கைப் பிரஜைகளாகிய பாடசாலை மாணவர்கள் மாத்திரமே கலந்துகொள்ளலாம். பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளமுடியாது.

1.1.2 இல்ல விளையாட்டு/ கோட்ட/ வலய/ மாகாண மற்றும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசாலை மாணவர்கள் போட்டி நடைபெறும் வருடத்தின் டிசம்பர் மாதம் 31 திகதியும் உள்ளடங்களாக அத்தினத்திற்கு உரிய வயதெல்லைக்குள் இருத்தல் வேண்டும். மேலும் பாடசாலை விளையாட்டு சங்கங்களினூடாக நடாத்தப்படும் போட்டிகளுக்குரிய வயதெல்லைகளை உரிய பாடசாலை விளையாட்டு சங்கம் தீர்மானித்தல் வேண்டும்.

1.1.3 12 வயதிற்கு கீழ் மாணவர்களுக்கு ஏந்தவொரு போட்டிகளையும் போட்டித்தன்மை மிக்க வகையில் நடத்தலாகாது. பாடசாலை சங்கங்களூடாக நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் 13 வயதிற்கு கீழ் வயதெல்லையினருக்கு போட்டிகள் நடாத்தப்படும் எனின் அப் போட்டிகளில் 12 வயதை விட கூடிய வீர வீராங்கனைகள் மாத்திரமே கலந்துகொள்ள முடியும். 12 வயதிற்கு கீழுள்ளவர்களுக்கு போட்டிகள் ஏற்பாடு செய்யப்படவேண்டும் எனின் கல்வி அமைச்சு அதற்குரிய அனுமதியை வழங்காது என்பதுடன் 12 வயதிற்கு குறைந்தவர்களுக்கு விளையாட்டுகளை அறிமுகப்படுத்தும் போது அவர்களைக் கவரக் கூடிய வகையில் மகிழ்ச்சிகரமானதாக ஏற்பாடு செய்யலாம்.

1.1.4. சகல விளையாட்டு அணிகளுக்கும் பொறுப்பாசிரியர் ஒருவர் பாடசாலை அதிபரின் கடிதமொன்றினூடாக நியமனம் செய்யப்பட்டு அவர் கலந்துகொள்ளல் வேண்டும். மாணவிகள் கலந்துகொள்வார்கள் எனின் ஆசிரியை ஒருவரும் கட்டாயமாக கலந்துகொள்ள வேண்டும்.

1.1.5. போட்டிகளில் கலந்துகொள்ளும் சகல வீர வீராங்கனைகளும் பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமான ஆடைகளை அணிந்திருக்க வேண்டும் என்பதுடன் மாணவர்களுக்குரிய ஒழுக்க விழுமியங்களுடன் மைதானங்களில் மாத்திரமல்லாது அதற்கு வெளியேயும் நடந்துகொள்வது கட்டாயமாகும். போட்டி மனப்பாங்கு மற்றும் நியாயமான போட்டி போன்ற விளையாட்டுக்குரிய பண்புகளை பாதுகாத்து போட்டிகளில் கலந்துகொள்வது வீர வீராங்கனைகளது பொறுப்பாகும்.

1.1.6. சகல வீர வீராங்கனைகளதும் வயதினை உறுதிப்படுத்துவதற்காக உத்தியோகபூர்வ பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும். மாவட்ட பதிவாளரின் ஒப்பத்துடன் கூடிய பிரதியே உத்தியோகபூர்வ பிறப்புச் சான்றிதழாக ஏற்றுக்கொள்ளப்படும்.

1.1.7. போட்டிகளில் கலந்துகொள்ளும் சகல வீர வீராங்கனைகளும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். 15 வயது நிறைவடையாத வீர வீராங்கனைகள் மாத்திரம் தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தபால் அடையாள அட்டையினை சமர்ப்பிக்கலாம்.

1.1.8. ஒரு மாணவர் ஒரு வருடத்தினுள், ஒரு போட்டியில், ஒரு பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி மாத்திரமே கலந்துகொள்ள முடியும். ஆகையால் எவரேனும் ஒரு வீரர் கோட்டம் அல்லது வலயம் அல்லது மாவட்டம் அல்லது மாகாண மட்டத்தில் தான் பிரதிநித்துவப்படுத்திய பாடசாலையிலிருந்து விலகி புதிய பாடசாலையில் அனுமதி பெற்றிருப்பினும் அடுத்த கட்ட போட்டிகளில் தான் முதலில் பிரதிநிதித்துவப்படுத்திய பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்தியே போட்டிகளில் கலந்துகொள்ளவேண்டும்.

1.1.9. மாணவர்கள் பிரிதொரு பாடசாலையில் அனுமதி பெற்றதன் பின்னர் அப் பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலத்தினுள் புதிய பாடசாலையின் பெயரின் கீழ் போட்டிகளுக்கு தம்மை பதிவுசெய்துகொள்வார்களாயின் அவர் தற்போது கல்வி கற்கும் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றுதல் தொடர்பில் தமக்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்பதாக அம்மாணவர் இதற்கு முன்னர் கல்வி கற்ற சகல பாடசாலை அதிபர்களிடமிருந்தும் எழுத்துமூல கடிதங்களைப் பெற்று அக்கடிதங்களை கல்வி அமைச்சின் விளையாட்டு மற்றும் உடற் கல்விக் கிளையின் பணிப்பாளரிடம் சமர்ப்பித்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தரம் 6 மற்றும் தரம் 12 இல் முதல் தடவையாக அனுமதி பெறும் மாணவர்கள் பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் விளையாட்டுப் பாடசாலைகளுக்கு புலமைப் பரிசில் பெற்று அனுமதி பெறும் மாணவர்கள் தமது விளையாட்டுப் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் மேலே 1.1.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை செல்லுபடியாகாது.

1.1.10. போட்டிக்கு விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் மாணவரொருவர் தான் விண்ணப்பிக்கும் பாடசாலையில் அனுமதி பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் இதன் போது மேலே 1.1.9 இற்கமைய செயற்படல் வேண்டும்.

1.1.11. 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பாடசாலைகளில் அதிபர்களால் உரிய மாணவர்கள் பாடசாலையில் முழுநேரம் கற்கின்றார்கள் என எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படுதல் கட்டாயமாகும். (கல்வி அமைச்சினால் இதற்கான அதற்குரிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டு உரிய முறையில் 13 வருட கல்வி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு மட்டும் இது செல்லுபடியாகும்)

1.1.12. பலதரப்பட்ட விளையாட்டுக்களில் செல்லுபடியாகும் பொது சட்ட விதிமுறைகளுக்கு மேலதிகமாக கல்வி அமைச்சினால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கமைவாக போட்டிகள் நடாத்தப்படும்.

1.1.13. கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் வருடாந்த நாட்காட்டிக்கமைவாக விண்ணப்பித்தல் மற்றும் போட்டிகளை நடாத்துதல் வேண்டும்.

**1.2 விளையாட்டுக்களின் வகைப்படுத்தல்**

1.2.1. பாடசாலை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் விளையாட்டுப் போட்டிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் படி வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1.2.1.1 அகில இலங்கை பாடசாலை விளையாட்டுச் சுற்றுப்போட்டி

1.2.1.2 பாடசாலை விளையாட்டுச் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்படும் விளையாட்டுப் போட்டிகள்

1.2.1.3 கல்வி அமைச்சின் அனுமதியுடன் தேசிய விளையாட்டுச் சங்கங்கள், மாவட்ட சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் வேறு அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்படும் விளையாட்டுப் போட்டிகள்

1.2.2. அகில இலங்கை பாடசாலை விளையாட்டு சுற்றுப்போட்டி

இச் சுற்றுப்போட்டி கீழேயுள்ள கட்டங்களைக் கொண்டது.

1.2.2.1 பாடசாலை மட்டம் (இல்ல விளையாட்டுப் போட்டி)

1.2.2.2 கோட்ட மட்டம் (போட்டிகளை நடாத்துவது தொடர்பாக மாகாணக் கல்வித் திணைக்களம் அல்லது வலயக் கல்வி அலுவலகம் தீர்மானிக்கலாம்.)

1.2.2.3 வலய மட்டம்

1.2.2.4 மாகாண மட்டம்

1.2.2.5 தேசிய மட்டம்

1.2.3. அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் அணி போட்டிகளுக்குரிய விண்ணப்பப்படிவங்கள் அணிக்குப் பொறுப்பான ஆசிரியர், அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அகில இலங்கை மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் விண்ணப்பப்படிவங்களில் எந்தவொரு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட அனுமதி வழங்கப்படமாட்டாது.

1.2.4. அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் வீர வீராங்கனைகளை கலந்துகொள்ளச்செய்வதற்காக மாகாணக் கல்வித் திணைக்களங்களூடாக மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படுவது அம்மாணவர் இதற்கு முந்தைய வருடத்தில் அகில இலங்கை மட்ட பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் காட்டியுள்ள திறமைகளை அடிப்படையாகக் கொண்டேயாகும். அவ்வாறு கருத்தில் கொள்ளப்படும் வீர வீராங்கனைகள் உரிய மாகாணத்திற்குரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலத்தில் கல்வி அமைச்சின் முறையான அனுமதி பெற்று இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாட்டு சுற்றுப்போட்டிகளில் கலந்துகொண்டிருப்பின் அல்லது நோய்வாய்ப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தி அரச விளையாட்டு வைத்தியப் பிரிவினால் வழங்கப்பட்ட வைத்தியச் சான்றிதழை சமர்ப்பித்திருப்பின் அவையும் கருத்தில் கொள்ளப்படும். அவ் வீரர் அல்லது வீராங்கனை கட்டாயமாக போட்டி நடைபெறும் வருடத்தில் வலய மட்ட போட்டிகளில் கலந்துகொள்வதற்குரிய தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். நேரடியாக மாகாண மட்டத்தில் நடைபெறும் போட்டியொன்றாயின் (ஒற்றையர்) அவ் வீரர் அல்லது வீராங்கனை முந்தைய வருடத்தில் தாம் விண்ணப்பித்திருக்கும் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் அல்லது திறமை மட்டத்தை அடைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரது பரிந்துரையுடன் விண்ணப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும் அம்மாணவரது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் மேன்முறையீட்டுக் குழுவையே சாரும்.

1.2.5. இல்ல விளையாட்டுப் போட்டிகளின் பின்னர் பாடசாலை மாணவர்கள் உரிய வருடத்தில் கலந்துகொள்ள முடியுமான விளையாட்டுப் போட்டிகள் கீழ் வருமாறு,

| விளையாட்டுப் போட்டிகள் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| 1. மெய்வல்லுனர் விளையாட்டு (ஆண் / பெண்) | √ | √ | √ | √ |
| 2.கரப்பந்து (ஆண் / பெண்) | √ | √ | √ | √ |
| 3.வலைப்பந்து (பெண் ) | √ | √ | √ | √ |
| 4.கால்பந்து(ஆண் / பெண்) | √ | √ | √ | √ |
| 5. எல்லே (ஆண் / பெண்) | √ | √ | √ | √ |
| 6. மென்பந்து கிரிக்கெட் (ஆண் / பெண்) | √ | √ | √ | √ |
| 7. செஸ்(ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 8.கராத்தே (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 9.பட்மிட்டன் (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 10.மேசைப்பந்து (ஆண் / பெண் ) | 0 | 0 | √ | √ |
| 11.நீச்சல்(ஆண் / பெண் ) | 0 | 0 | √ | √ |
| 12.எறி பந்து (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 13.கேரம் (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 14.ஜிம்னாஸ்டிக் (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 15. ஏரோபிக் ஜிம்னாஸ்டிக் (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 16.ஏழு பேர் கொண்ட றகர்(ஆண்) | 0 | 0 | √ | √ |
| 17. கபடி (ஆண் / பெண் ) | 0 | 0 | √ | √ |
| 18. டைகொண்டோ(ஆண் / பெண் ) | 0 | 0 | √ | √ |
| 19. வூசூ(ஆண் / பெண் ) | 0 | 0 | √ | √ |
| 20. கூடைப் பந்து (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 21. ஹொக்கி (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 22. உடற்பயிற்சி (ஆண் / பெண் ) | 0 | 0 | √ | √ |
| 23. லெதர் பந்து கிரிக்கெட் (ஆண்) | 0 | 0 | √ | √ |
| 24. அரை மராத்தான் (ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 25. கைப் பந்து(ஆண் / பெண்) | 0 | 0 | √ | √ |
| 26. கடற்கரை கரப்பந்து (ஆண் /பெண் ) | 0 | 0 | 0 | √ |
| 27. மல்யுத்தம் (ஆண்) | 0 | 0 | 0 | √ |
| 28. குத்துச் சண்டை (ஆண்) | 0 | 0 | 0 | √ |
| 29. ஜூடோ (ஆண் / பெண் ) | 0 | 0 | 0 | √ |
| 30. டெனிஸ்(ஆண் / பெண் ) | 0 | 0 | 0 | √ |
| 31. பாரம் தூக்கல் (ஆண் / பெண்) | 0 | 0 | 0 | √ |
| 32. சைக்கிளோட்டம் (ஆண் / பெண் ) | 0 | 0 | 0 | √ |

கவனத்தில் கொள்க (க.கொ). - √ போட்டி நடைபெறும். 0 - போட்டி நடைபெறாது.

க. பொ. மேலே குறிப்பில் காட்டப்பட்டுள்ள சகல விளையாட்டுக்களும் இச்சுற்றுநிருபம் வெளியிடப்பட்டு இரண்டு வருடங்களுள் ஆகக் குறைந்தது ஒரு மாகாணத்திற்கு ஐந்து (05) பாடசாலைகள் என்றவாறாக ஒன்பது மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 50 பாடசாலைகள் அல்லது அதற்கு மேலதிகமான பாடசாலைகளில் அவ் விளையாட்டு பரவலாக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு பரவலாக்கப்பட்டிராத விளையாட்டுக்களுக்குரிய போட்டிகளை அகில இலங்கை மட்டத்தில் நடாத்தாது பரவலாக்கப்பட்டிருக்கும் மாகாணங்களில் மாத்திரம் மாகாண மட்டத்தில் போட்டிகளை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தேசிய மட்டத்திற்காக புதிய விளையாட்டு ஒன்று தகைமை பெறவேண்டுமெனின் ஆகக் குறைந்தது ஒரு மாகாணத்திற்கு 05 பாடசாலைகள் என்றவாறாக ஐந்து மாகாணங்களின் பிரதிநிதித்துவம் காணப்படல் வேண்டும். தேசிய மட்டத்தில் இணைந்து இரண்டு வருடங்களுக்குள் சகல மாகாணங்களிலும் அப் புதிய விளையாட்டு பரவலாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## 1.3 போட்டி விபரங்கள்

### 1.3.1. மெய்வல்லுனர் விளையாட்டு

**1.3.1.1.** மெய்வல்லுனர் விளையாட்டு வயதெல்லைகள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகள்

மாகாண மட்டம்

- 12 ற்குக் கீழ் ஆண் / பெண் - (10 வருடங்களுக்கு மேல் 12 வருடங்களுக்கு கீழ்)
- 14 ற்குக் கீழ் ஆண் / பெண் - (12 வருடங்களுக்கு மேல் 14 வருடங்களுக்கு கீழ்)
- 16 ற்குக் கீழ் ஆண் / பெண் - (14 வருடங்களுக்கு மேல் 16 வருடங்களுக்கு கீழ்)
- 18 ற்குக் கீழ் ஆண் / பெண் - (16 வருடங்களுக்கு மேல் 18 வருடங்களுக்கு கீழ்)
- 20 ற்குக் கீழ் ஆண் / பெண் - (18 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்)

**1.3.1.2.** அதிபரின் விருப்பத்திற்கமைய இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மட்டும் வேறு வயதெல்லைகளின் கீழ் போட்டிகளை நடாத்தலாம்.

**1.3.1.3.** 12 வயதிற்கு கீழ் ஆண்/ பெண் வயதெல்லையினரில் மாகாண திறமை மட்டத்தை தாண்டிய சகல வீர வீராங்கனைகளும் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.

**1.3.1.4.** 12 வயதிற்கு கீழ் போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகள் வீர வீராங்கனைகளுக்கு வழங்கப்படமாட்டாது என்பதுடன் தேசிய திறமை மட்டத்தை தாண்டும் வீர வீராங்கனைகளுக்கு திறமைச் சான்றிதழ் வழங்கப்படும். திறமை மட்டத்தை தாண்டும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் உரிய பாடசாலைக்கு 01 புள்ளி வீதம் கிடைக்கப்பெறும்.

**1.3.1.5.**

12 ற்குக் கீழ் ஆண் / பெண் - (10 வருடங்களுக்கு மேல் 12 வருடங்களுக்கு கீழ்)

| ஆண் | பெண் |
|---|---|
| 60 மீட்டர் | 60 மீட்டர் |
| 100 மீட்டர் | 100 மீட்டர் |
| உயரம் பாய்தல் | உயரம் பாய்தல் |
| தூரம் பாய்தல் | தூரம் பாய்தல் |
| 50 மீட்டர் X 4 | 50 மீட்டர் X 4 |

1.3.1.6.

**14 ற்குக் கீழ் ஆண் / பெண் - (12 வருடங்களுக்கு மேல் 14 வருடங்களுக்கு கீழ்)**

| ஆண் | பெண் |
|---|---|
| 60 80 மீட்டர் | 60 80 மீட்டர் |
| 100 மீட்டர் | 100 மீட்டர் |
| 80 மீட்டர் தடை தாண்டல் ( 0.762 மீ) | 80 மீட்டர் தடை தாண்டல் (0.762 மீ) |
| உயரம் பாய்தல் | உயரம் பாய்தல் |
| தூரம் பாய்தல் | தூரம் பாய்தல் |
| குண்டெறிதல் (3 கிலோ ) | குண்டெறிதல் (3 கிலோ ) |
| 100 மீட்டர் X 4 | 100 மீட்டர் X 4 |
| 800m | 800 m |

1.3.1.7.

**16 ற்குக் கீழ் ஆண் / பெண் - (14 வருடங்களுக்கு மேல் 16 வருடங்களுக்கு கீழ்)**

| ஆண் | பெண் |
|---|---|
| 100 மீட்டர் | 100 மீட்டர் |
| 200 மீட்டர் | 200 மீட்டர் |
| 400 மீட்டர் | 400 மீட்டர் |
| 800 மீட்டர் | 800 மீட்டர் |
| 100 மீட்டர் தடை தாண்டல் (0.838 மீ) | 100 மீட்டர் தடை தாண்டல் (0.762 மீ) |
| 300 மீட்டர் தடை தாண்டல் 07 (0.762 மீ) | 300 மீட்டர் தடை தாண்டல் 07 (0.762 மீ) |
| 100 மீட்டர் X 4 | 100 மீட்டர் X 4 |
| 400 மீட்டர் X 4 | 400 மீட்டர் X 4 |
| உயரம் பாய்தல் | உயரம் பாய்தல் |
| தூரம் பாய்தல் | தூரம் பாய்தல் |
| குண்டெறிதல் (4 கிலோ) | குண்டெறிதல் (3 கிலோ) |
| தட்டெறிதல் (1 கிலோ) | தட்டெறிதல் (1 கிலோ) |
| ஈட்டி எறிதல் (600 கிராம்) | ஈட்டி எறிதல் (500 கிராம்) |

1.3.1.8

18 ற்குக் கீழ் ஆண் / பெண் - (16 வருடங்களுக்கு மேல் 18 வருடங்களுக்கு கீழ்)

| ஆண் | பெண் |
|---|---|
| 100 மீட்டர் | 100 மீட்டர் |
| 200 மீட்டர் | 200 மீட்டர் |
| 400 மீட்டர் | 400 மீட்டர் |
| 800 மீட்டர் | 800 மீட்டர் |
| 1,500 மீட்டர் | 1,500 மீட்டர் |
| 110 மீட்டர் தடை தாண்டல் (0.914 மீ) | 100 மீட்டர் தடை தாண்டல் (0.762 மீ) |
| 400 மீட்டர் தடை தாண்டல் (0.838 மீ) | 400 மீட்டர் தடை தாண்டல் (0.762 மீ) |
| 100 மீட்டர் X 4 | 100 மீட்டர் X 4 |
| 400 மீட்டர் X 4 | 400 மீட்டர் X 4 |
| உயரம் பாய்தல் | உயரம் பாய்தல் |
| தூரம் பாய்தல் | தூரம் பாய்தல் |
| முப்பாய்ச்சல் | முப்பாய்ச்சல் |
| கோலூன்றிப் பாய்தல் | கோலூன்றிப் பாய்தல் |
| குண்டெறிதல் (5 கிலோ) | குண்டெறிதல் (3 கிலோ) |
| தட்டெறிதல் (1.5 கிலோ) | தட்டெறிதல் (1 கிலோ) |
| ஈட்டி எறிதல் (700 கிராம்) | ஈட்டி எறிதல் (500 கிராம்) |
| 3000m | 3000m |

1.3.1.9

20 ற்குக் கீழ் ஆண் / பெண் - (18 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்)

| ஆண் | பெண் |
|---|---|
| 100 மீட்டர் | 100 மீட்டர் |
| 200 மீட்டர் | 200 மீட்டர் |
| 400 மீட்டர் | 400 மீட்டர் |
| 800 மீட்டர் | 800 மீட்டர் |
| 1,500 மீட்டர் | 1,500 மீட்டர் |
| 5,000 மீட்டர் | 5,000 மீட்டர் |
| 110 மீட்டர் தடை தாண்டல் (0.990 மீ ) | 100 மீட்டர் தடை தாண்டல் (0.838 மீ ) |
| 400 மீட்டர் தடை தாண்டல் (0.914 மீ) | 400 மீட்டர் தடை தாண்டல் (0.762 மீ) |
| 100 மீட்டர் X 4 | 100 மீட்டர் X 4 |
| 400 மீட்டர் X 4 | 400 மீட்டர் X 4 |
| உயரம் பாய்தல் | உயரம் பாய்தல் |
| தூரம் பாய்தல் | தூரம் பாய்தல் |
| முப்பாய்ச்சல் | முப்பாய்ச்சல் |
| கோலூன்றிப் பாய்தல் | கோலூன்றிப் பாய்தல் |
| குண்டெறிதல் (6 கிலோ) | குண்டெறிதல் (4 கிலோ) |
| தட்டெறிதல் (1.75 கிலோ) | தட்டெறிதல் (1 கிலோ) |
| ஈட்டி எறிதல் (800 கிராம்) | ஈட்டி எறிதல் (600 கிராம்) |

**1.3.1.10**

தடைதாண்டி ஓடல் போட்டிக்கான அளவீடுகள்

| போட்டி | ஆரம்ப கோட்டிலிருந்து முதலாம் தடை வரையிலான தூரம் | தடைகளுக்கு இடையிலான தூரம் | இறுதித் தடையில் இருந்து வெற்றிக் கோடு வரையான தூரம் | தடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 80 மீட்டர் தடை தாண்டல் | 12.00 மீட்டர் | 8.00 மீட்டர் | 12.00 மீட்டர் | 08 |
| 100 மீட்டர் தடை தாண்டல் | 13.00 மீட்டர் | 8.50 மீட்டர் | 10.50 மீட்டர் | 10 |
| 110 மீட்டர் தடை தாண்டல் | 13.72 மீட்டர் | 9.14 மீட்டர் | 14.02 மீட்டர் | 10 |
| 300 மீட்டர் தடை தாண்டல் | 50.00 மீட்டர் | 35.00 மீட்டர் | 40.00 மீட்டர் | 10 |
| 400 மீட்டர் தடை தாண்டல் | 45.00 மீட்டர் | 35.00 மீட்டர் | 40.00 மீட்டர் | 10 |

**1.3.1.11** அகில இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சுற்றுப்போட்டியில் அகில இலங்கை மட்டத்திற்கு 14, 16, 18, 20 வயதிற்குக் கீழ் வயதெல்லையினருக்கு ஒரு தனிப் போட்டி நிகழ்ச்சிக்கு வீர வீராங்கனைகள் நான்கு (04) பேரும், அஞ்சல் போட்டி நிகழ்ச்சியொன்றிற்கு மூன்று அணிகளும் மாகாண மட்டத்தில் கலந்துகொள்ளலாம். கோட்ட, வலய மற்றும் மாகாண மட்ட போட்டிகளை நடாத்தும் போது அதில் கலந்துகொள்ளக்கூடிய போட்டியாளர்களின் எண்ணிக்கை மாகாணத்தினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

**1.3.1.12** 18 வயதிற்கு கீழ் மற்றும் 20 வயதிற்கு கீழ் வர்ண திறமை மட்டங்கள் மற்றும் 12 வயதிற்கு கீழ் திறமை மட்டம் ஆகியவை பிரதி வருடம் ஜனவரி மாதம் 31ம் திகதிக்கு முன்னர் மாகாணத்தின் விடயத்திற்குப் பொறுப்பான பி.க.ப/ உ.க.ப அவர்களால் அறியத்தரப்படும்.

## 1.3.2. கரப்பந்து ( ஆண் / பெண் )

**1.3.2.1.** வயதெல்லைகள்

- **16** ற்குக் கீழ் **(14** வருடங்களுக்கு மேல் **16** வருடங்களுக்கு கீழ்)
- **18** ற்குக் கீழ் **(16** வருடங்களுக்கு மேல் **18** வருடங்களுக்கு கீழ்)
- **20** ற்குக் கீழ் **(18** வருடங்களுக்கு மேல் **20** வருடங்களுக்கு கீழ்)

**1.3.2.2.** போட்டிகளில் சுற்றுக்களின் எண்ணைக்கையினை ஏற்பாட்டாளர்களால் தீர்மானிக்கலாம்

**1.3.2.3** சகல போட்டியாளர்களும் தமக்குரிய 1-18 வரையிலான இலக்கங்களை தமது சட்டையில் தெளிவாக தெரியக்கூடிய வரையில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இலக்கத்துடனான சட்டை அணியாத போட்டியாளர்கள் கலந்து கொள்ள இடமளிக்கப்பட மாட்டார்கள்.

**1.3.2.4.** வலையின் உயர அளவு

- 16 ற்குக் கீழ் ஆண் - 2.32 மீ பெண் - 2.12 மீ
- 18 ற்குக் கீழ் ஆண் - 2.43 மீ பெண் - 2.24 மீ
- 20 ற்குக் கீழ் ஆண் - 2.43 மீ பெண் - 2.24 மீ

1.3.2.5 12 பேர் கொண்ட போட்டியாளர்கள் அணியின் பட்டியலில் இருந்து போட்டியில் கலந்து கொள்பவர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

1.3.2.6 மாகாண மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளை பெறும் அணிகள் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யலாம்.

1.3.2.7 சகல போட்டிகளும் சர்வதேச கரப்பந்து சட்ட விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.

## 1.3.3. வலைப் பந்து (பெண்)

1.3.3.1. வயதெல்லைகள்

- **16** ற்குக் கீழ் (**14** வருடங்களுக்கு மேல் **16** வருடங்களுக்கு கீழ்)
- **18** ற்குக் கீழ் (**16** வருடங்களுக்கு மேல் **18** வருடங்களுக்கு கீழ்)
- **20** ற்குக் கீழ் (**18** வருடங்களுக்கு மேல் **20** வருடங்களுக்கு கீழ்)

1.3.3.2. போட்டிக்கான கால எல்லை

- 16 ற்குக் கீழ் - 10 நிமிடங்கள் - 3 – 10
- 18 ற்குக் கீழ் - 15 நிமிடங்கள் - 5 - 15
- 20 ற்குக் கீழ் - 20 நிமிடங்கள் - 5 - 20

1.3.3.3. சகல வீராங்கனைகளும் தமதி நிலைகளின் பெயர்களை தமது சட்டையின் முன் மற்றும் பின் பக்கங்களிலும் தெளிவாக தெரியக்கூடியவாறு அணிந்திருத்தல் வேண்டும்.

1.3.3.4. 12 பேர் கொண்ட போட்டியாளர் அணியினை பட்டியலிடவேண்டும் என்பதுடன் ஒரு தடவையில் ஆகக்கூடியது 07 பேரும் ஆகக் குறைந்த்து 05 போட்டியாளர்களும் விளையாடலாம்.

1.3.3.5. மாகாண மட்ட போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்றுக் கொண்ட அணிகள் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

1.3.3.6. சகல போட்டிகளும் சர்வதேச வலைப்பந்துப் போட்டி சட்ட விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.

## 1.3.4. காற்பந்து ( ஆண் / பெண் )

1.3.4.1. வயதெல்லைகள்

ஆண்

- **16** ற்குக் கீழ் (**14** வருடங்களுக்கு மேல் **16** வருடங்களுக்கு கீழ்)
- **18** ற்குக் கீழ் (**16** வருடங்களுக்கு மேல் **18** வருடங்களுக்கு கீழ்)
- **20** ற்குக் கீழ் (**18** வருடங்களுக்கு மேல் **20** வருடங்களுக்கு கீழ்)

பெண்

- **20** ற்குக் கீழ் (**17** வருடங்களுக்கு மேல் **20** வருடங்களுக்கு கீழ்)
- **17** ற்குக் கீழ் (**14** வருடங்களுக்கு மேல் **17** வருடங்களுக்கு கீழ்)

1.3.4.2. ஒரு அணிக்கு பதிவு செய்யக்கூடிய ஆகக் கூடிய போட்டியாளர்களின் எண்ணிக்கை 18 ஆகும். போட்டியிடுவதற்காக அதிலிருந்து 11 பேரை தெரிவு செய்யலாம்.

1.3.4.3. வீராங்கனைகள் மைதானத்தில் நுழையும் போது தம்மை இனம் காண்பதற்காக இலக்கத்தை அணிந்திருத்தல் வேண்டும்,. அவ் இலக்கங்கள் 1 முதல் 18 ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன் போட்டி இலக்கங்களை அணியாத வீர வீராங்கனைகள் விளையாட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

1.3.4.4. போட்டிக்கான காலம்

- **25– 05 – 25** நிமிடங்கள் (ஆண்)
- **20– 05 – 20** நிமிடங்கள் (பெண்)

1.3.4.5. மாகாண மட்ட போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெறும் அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

1.3.4.6. சகல போட்டிகளும் சர்வதேச காற்பந்து போட்டி சட்ட விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.

## 1.3.5. எல்லே (ஆண் / பெண் )

1.3.5.1. வயதெல்லைகள்

- 20 ற்குக் கீழ் - ( 14 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்)

1.3.5.2. வீர வீராங்கனைகள் 20 பேர் கொண்ட அணி பட்டியலிடப்பட்டு போட்டியிடுபவர்களை அப்பட்டியலில் இருந்து தெரிவு செய்ய வேண்டும். அணியொன்றில் ஆகக் குறைந்த்து 12 பேரும் ஆகக் கூடியது 16 பேரும் போட்டியிடலாம்.

1.3.5.3. சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி தவிர ஏனைய சகல போட்டிகளிலும் ஒரு அணிக்கு ஒரு இனிங்க்ஸ் மட்டுமே விளையாடலாம்.

1.3.5.4 ஒரு அணிக்கு ஒரு இனிங்ஸிற்காக 40 பந்து வீச்சுக்கள் கிடைக்கும். ஒரு அணிக்கான சகல பந்துவீச்சக்களும் நிறைவடைய முன்னர் போட்டியாளர்கள் அனைவரும் அவுட் ஆனால் அவர்களுக்கான இனிங்ஸ் நிறைவடையும்.

1.3.5.5. துடுப்பெடுத்தாடும் அணியின் ஒருவரே பந்துவீச வேண்டும்.

1.3.5.6. மாகாண மட்ட போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெறும் அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

1.3.5.7. சகல போட்டிகளும் இலங்கை எல்லே பேரவையினால் பாடசாலைகளுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்ட விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.

## 1.3.6. மென்பந்து கிரிக்கெட் ( ஆண் / பெண் )

1.3.6.1. வயதெல்லைகள்

- 20 ற்குக் கீழ் - ( 14 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்)

1.3.6.2. மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டியாக நடைபெறும். ஒரு அணிக்கு 10 ஓவர்கள் கிடைக்கும்.

1.3.6.3. ஒரு அணியில் 15 வீர வீராங்கனைகளது பெயர் பட்டியல் இருக்க வேண்டும் என்பதுடன் ஒரு தடவையில் 11 பேர் மாத்திரமே விளையாடலாம். ஆகக் குறைந்தது 9 பேரேனும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்.

1.3.6.4. ஒருவருக்கு இரண்டு ஓவர்கள் மட்டுமே பந்து செலுத்தலாம்.

1.3.6.5. மாகாண மட்ட போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெறும் அணிகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

1.3.6.6. இலங்கை தேசிய மென்பந்து கிரிக்கெட் சங்கம் மற்றும் பாடசாலை சங்கங்களின் சட்ட விதிமுறைகளுக்கமைய போட்டிகள் நடைபெறும்.

## 1.3.7. செஸ்( ஆண் / பெண் )

1.3.7.1. வயதெல்லைகள்

- 17 ற்குக் கீழ் - ( 14 வருடங்களுக்கு மேல்.17 வருடங்களுக்கு கீழ்)
- 20 ற்குக் கீழ் - ( 17 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ் )

1.3.7.2. ஒரு அணி 7 வீர வீராங்கனைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒரு தடவையில் 6 பேர் போட்டியிட முடியும் என்பதுடன் மிகுதியாக உள்ளவர் மேலதிக போட்டியாளராக கருதப்படுவர்.

1.3.7.3. 6 சுற்றுக்களைக் கொண்டதாக போட்டி நடைபெறும்.

1.3.7.4. எக்காரணங்கொண்டும் முன்வைக்கப்படும் அணி வீர வீராங்கனைகளின் ஒழுங்கினை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது.

1.3.7.5. மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் வீர வீராங்கனைகள் மற்றும் அணிகள் தேசிய மட்ட போட்டியில் கலந்து கொள்ளலாம்.

1.3.7.6. சர்வதேச செஸ் போட்டி சட்ட விதிமுறைகளுக்கமைய (பிடே) போட்டிகள் நடைபெறும்.

## 1.3.8. கராத்தே (ஆண் / பெண் )

1.3.8.1 மூன்று வயதெல்லைகளுக்கும் காத்தா மற்றும் கும்தே தனியாள் போட்டிகள் நடைபெறும்.

1.3.8.2 காத்தா போட்டி

1.3.8.2.1 காத்தா தனியாள் போட்டி ஆண் / பெண்

- 16 ற்குக் கீழ் ஆண் / பெண் போட்டி - (14 வருடங்களுக்கு மேல்.16 வருடங்களுக்கு கீழ்)
- 18 ற்குக் கீழ் ஆண் / பெண் போட்டி - (18 வருடங்களுக்கு மேல்.18 வருடங்களுக்கு கீழ்
- 20 ற்குக் கீழ் ஆண் / பெண் போட்டி - (18 வருடங்களுக்கு மேல்.20 வருடங்களுக்கு கீழ்)

1.3.8.2.2 காத்தா குழுப் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து ஆண், பெண் என வெவ்வேறாக இரண்டு அணிகள் மாத்திரம் கலந்து கொள்ள முடியும்.

1.3.8.3 கும்தே போட்டி

1.3.8.3.1 கும்தே தனியாள் போட்டி

- **16** ற்குக் கீழ் - (**14** வருடங்களுக்கு மேல் **16** வருடங்களுக்கு கீழ்)
  கும்தே (பெண்) **-45kg , +45kg**
  கும்தே (ஆண்) **-47kg, -57kg, +57kg**

- **18** ற்குக் கீழ் - ( **16** வருடங்களுக்கு மேல் **18** வருடங்களுக்கு கீழ்)
  கும்தே (பெண்) **-48kg, +48kg**
  கும்தே (ஆண்) **-50kg, -61kg, +61kg**

- **20** ற்குக் கீழ் - (**18** வருடங்களுக்கு மேல். **20** வருடங்களுக்கு கீழ்)
  கும்தே பெண் **-50kg, +50kg**
  கும்தே ஆண் **-52kg, -67kg, +67kg**

1.3.8.3.2 கும்தே குழுப் போட்டி

குழு கும்தே போட்டியில் ஒரு பாடசாலையிலிருந்து ஆண், பெண் என வெவ்வேறாக இரண்டு குழுக்கள் மாத்திரம் கலந்துகொள்ளலாம்.

1.3.8.3.2.1 ஆண் / பெண்களுக்கான கும்தே குழுப் போட்டியில் ஒரு வயதெல்லையில் ஒரு வீரர்/ வீராங்கனை வீதம் மூன்று வயதெல்லைகளில் இருந்தும் வீர வீராங்கனைகள் மூன்று பேர் கலந்து கொள்ளலாம்.

1.3.8.4. குழுக் காத்தா போட்டியில் 14 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ் வயதெல்லையில் எந்த மூன்று பேர்களையேனும் கலந்து கொள்ளச் செய்யலாம். இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணி புன்காய் **(Bunkai )** முறையினை செய்து காட்ட வேண்டும்.

**1.3.8.5.** கும்தே போட்டியில் கலந்து கொள்ளும் சகல போட்டியாளர்களும் உடற் தகைமை தொடர்பான மருத்துவச் சான்றிதழ் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். அச் சான்றிதழ் அதிபரால் தனிப்பட்ட ரீதியில் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பெற்றோரின் விருப்பக் கடிதம் ஒன்றும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**1.3.8.6.** மாகாண மட்ட ஒற்றையர் போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெறும் மூன்று பேரும் குழுப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெறும் மூன்று அணிகளும் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.

## 1.3.9. பெட்மிண்டன் ( ஆண் / பெண் )

**1.3.9.1.** ஒற்றையர் போட்டி

**1.3.9.1.1** வயதெல்லைகள்

- வயதெல்லை 20 ற்குக் கீழ் (16 வருடங்களுக்கு மேல் - 20 வருடங்களுக்கு கீழ்)

**1.3.9.2.** ஒரு போட்டி 2/3 சுற்றுக்களைக் கொண்டது.

**1.3.9.3.** ஒரு மாகாணத்திலிருந்து கலந்து கொள்ளக்கூடிய அதியுயர் போட்டியாளர்களின் எண்ணிக்கை 4 ஆகும்.

**1.3.9.4.** ஒரு பாடசாலையிலிருந்து 3 வீர வீராங்கனைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம். (ஆண், பெண் என வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

**1.3.9.5.** குழுப் போட்டிகள்

**1.3.9.5.1** வயதெல்லைகள்

- 16 ற்குக் கீழ் - (14 வருடங்களுக்கு மேல் 16 வருடங்களுக்கு கீழ்)
- 18 ற்குக் கீழ் - (16 வருடங்களுக்கு மேல் 18 வருடங்களுக்கு கீழ்)
- 20 ற்குக் கீழ் - (18 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்)

**1.3.9.6.** முதல் சுற்று, இரு ஒற்றையர் போட்டிகளையும் ஒரு இரட்டையர் போட்டியினையும் கொண்டது. ஒற்றையர் பிரிவில் போட்டியில் கலந்து கொள்ளும் ஒருவர் இரட்டையர் பிரிவில் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

**1.3.9.7.** காலிறுதிச் சுற்று, அரையிறுதிச் சுற்று மற்றும் இறுதிச் சுற்றுக்கள் மாத்திரம் மூன்று ஒற்றையர் போட்டிகளையும் இரண்டு இரட்டையர் போட்டிகளையும் கொண்டிருக்கும் என்பதுடன் ஒற்றையர் பிரிவில் போட்டியிடும் போட்டியாளர்கள் இரட்டையர் பிரிவில் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

**1.3.9.8.** ஒரு அணியின் பட்டியலில் ஆகக் கூடியது 10 பேரும் ஆகக் குறைந்தது 6 பேரும் இருக்க முடியும் என்பதுடன் போட்டியிடுபவர்கள் அப்பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்படவேண்டும்.

**1.3.9.9.** சகல போட்டிகளிலும் சிறகுப் பந்துகளை ( **Feather Shuttles** ) உபயோகப்படுத்த வேண்டும்.

**1.3.9.10.** இரு குழுக்களுக்கிடையிலான போட்டியொன்றின் போது போட்டியிடும் ஒழுங்கு

II. ஒற்றையர் 1

III. இரட்டையர் 1

IV. ஒற்றையர் 2

V. இரட்டையர் 2

VI. ஒற்றையர் 3

கருத்தில் கொள்க. 6 போட்டியாளர்களை இணைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் எதிரணி போட்டியிடாது வெற்றிபெறும். அப் போட்டியானது "5ம் போட்டி" அதாவது ஒற்றையர் ( 3 ) போட்டியாக இருத்தல் வேண்டும்.

**1.3.9.11.** மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளை பெற்றுக் கொள்ளும் வீர வீராங்கனைகள் மற்றும் அணிகள் தேசிய மட்ட போட்டியில் கலந்து கொள்ளலாம்.

**1.3.9.12.** தேசிய பெட்மிண்டண்ட் போட்டி சட்ட விதிமுறைகளுக்கமைய சகல போட்டிகளும் நடைபெறும்.

## 1.3.10. மேசைப் பந்து ( ஆண் / பெண் )

**1.3.10.1.** ஒற்றையர் போட்டி

**1.3.10.1.1** வயதெல்லைகள்

- **20** ற்குக் கீழ் (**16** வருடங்களுக்கு மேல் – **20** வருடங்களுக்கு கீழ்)

**1.3.10.2.** ஒரு போட்டி ஐந்து சுற்றுக்களைக் கொண்டது.

**1.3.10.3.** மாகாணத்தில் இருந்து ஆகக் கூடியது 4 வீர வீராங்கனைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

**1.3.10.4.** ஒரு பாடசாலையிலிருந்து 3 வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளலாம்.

**1.3.10.5.** குழுப் போட்டிகள்

**1.3.10.5.1** வயதெல்லைகள்

- **16** ற்குக் கீழ் - ( **14** வருடங்களுக்கு மேல், **16** வருடங்களுக்கு கீழ் )
- **18** ற்குக் கீழ் - ( **16** வருடங்களுக்கு மேல், **18** வருடங்களுக்கு கீழ் )
- **20** ற்குக் கீழ் - ( **18** வருடங்களுக்கு மேல், **20** வருடங்களுக்கு கீழ் )

**1.3.10.6.** சுற்றுப் போட்டி ஐந்து சுற்றுக்களைக் கொண்டிருப்பதுடன் அது 5 ஒற்றையர் போட்டிகளைக் கொண்டது. அதாவது **A – X, B – Y, C – Z, A – Y, B – X** என்ற வகையில் அமையும்.

**1.3.10.7.** ஒரு அணியின் பட்டியலில் 6 வீர வீராங்கனைகளின் பெயர்கள் இடம்பெற வேண்டும். போட்டியிடுபவர்களை அப் பட்டியலில் இருந்து தெரிவு செய்ய வேண்டும். ஒரு அணியில் ஆகக் குறைந்தது 03 வீர வீராங்கனைகளேனும் இருத்தல் வேண்டும்.

**1.3.10.8.** மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளை பெறும் அணிகள் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

**1.3.10.9.** சர்வதேச மேசைபந்து சட்ட விதிமுறைகளுக்கமைய போட்டிகள் இடம்பெறும்.

**1.3.10.10.** **40** மி.மீ + பிளாஸ்டிக் **(Plastic )** வெள்ளைநிற பந்தினை உபயோகப்படுத்தி போட்டி நடைபெறும்.

## 1.3.11. நீச்சல் (ஆண் / பெண் )

**1.3.11.1** வயதெல்லைகள்

- **12** ற்குக் கீழ் - ( **10** வருடங்களுக்கு மேல்.**12** வருடங்களுக்கு கீழ் ) - ஆண் / பெண்
- **14** ற்குக் கீழ் - ( **12** வருடங்களுக்கு மேல்.**14** வருடங்களுக்கு கீழ் ) - ஆண் / பெண்
- **16** ற்குக் கீழ் - ( **14** வருடங்களுக்கு மேல் **16** வருடங்களுக்கு கீழ் ) - ஆண் / பெண்
- **18** ற்குக் கீழ் - ( **16** வருடங்களுக்கு மேல்.**18** வருடங்களுக்கு கீழ் ) - ஆண் / பெண்
- **20** ற்குக் கீழ் - ( **18** வருடங்களுக்கு மேல்.**20** வருடங்களுக்கு கீழ் ) - ஆண் / பெண்

**1.3.11.2** நடைபெறும் போட்டிகள்

| போட்டி | 12 ற்குக் கீழ் ஆண் / பெண் | 14 ற்குக் கீழ் ஆண் / பெண் | 16 ற்குக் கீழ் ஆண் / பெண் | 18 ற்குக் கீழ் ஆண் / பெண் | 20 ற்குக் கீழ் ஆண் | 20 ற்குக் கீழ் பெண் |
|---|---|---|---|---|---|---|
| ப்ரீ ஸ்டைல் | 50 மீ. ~~100 மீ.~~ | 50 மீ. 100 மீ. | 50/100/ 200 மீ. | 50/100/ 200/400 மீ. | 50/100/200 400/1500 மீ. | 50/100/200/ 400/800 மீ. |
| பெக் ஸ்ட்ரோக் | 50 மீ. | 50 மீ. 100 மீ. | 50 /100 மீ. | 50/100/200 மீ. | 50/100/200 மீ. | 50/100/200 மீ. |
| பட்டர் ஃப்ளை நீச்சல் | 50 மீ. | 50 மீ. 100 மீ. | 50 /100 மீ. | 50/100/200 மீ. | 50/100/200 மீ. | 50/100/200 மீ. |
| ப்ரெஸ்ட் ஸ்ட்ரோக் | 50 மீ. | 50 மீ. 100 மீ. | 50 /100 மீ. | 50/100/200 மீ. | 50/100/200 மீ. | 50/100/200 மீ. |
| ஒற்றையர் கலப்பு முறை நீச்சல் | - | 200 மீ. | 200 மீ. | 200 மீ. | 200 மீ. | 200 மீ. |
| ப்ரீ ஸ்டைல் அஞ்சல் | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 |
| கலப்பு முறை நீச்சல் அஞ்சல் | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 | 50 மீ. x 4 |

**1.3.11.3.** ஒரு போட்டியாளர் அஞ்சல் போட்டி தவிர்ந்த மூன்று (03) போட்டிகளில் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

**1.3.11.4.** ஒரு போட்டிக்காக ஒரு பாடசாலையிலிருந்து மூன்று வீர வீராங்கனைகள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

**1.3.11.5.** அஞ்சலோட்ட போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து ஒரு அணி கலந்து கொள்ளலாம்.

**1.3.11.6.** 12 வயதிற்கு கீழ் ஆண்/ பெண் வயதெல்லையினரில் மாகாண திறமை மட்டத்தை தாண்டிய சகல வீர வீராங்கனைகளும் தேசிய மட்ட போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.

**1.3.11.7** 12 ற்கு கீழ் மற்றும் 14 ற்குக் கீழ் போட்டிகளில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகள் வழங்கப்படாது என்பதுடன் தேசிய திறமை மட்டத்தினைத் தாண்டிய சகலருக்கும் சான்றிதழ் வழங்கப்படும். திறனை மட்டத்தினைத் தாண்டும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அப் பாடசாலைக்கு 01 புள்ளி வீதம் வழங்கப்படும்.

### 1.3.12. எறிபந்து (ஆண் / பெண்)

1.3.12.1. வயதெல்லைகள்

- 17 ற்குக் கீழ் - (14 வருடங்களுக்கு மேல் 17 வருடங்களுக்கு கீழ்)
- 20 ற்குக் கீழ் - (17 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்)

1.3.12.2. ஒரு அணியில் 12 வீர வீராங்கனைகள் இடம்பெறலாம். எனினும் ஒரு தடவையில் 7 பேர் மாத்திரமே விளையாடலாம்.

1.3.12.3 வலையின் உயரம் 2.20 மீ.

1.3.12.4 மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெறும் அணிகள் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.

1.3.12.5 தேசிய எறிபந்து சங்கம் மற்றும் பாடசாலை சங்கங்களின் போட்டி சட்ட விதிமுறைகளுக்கமைய போட்டிகள் நடைபெறும்.

### 1.3.13. கேரம் (ஆண் / பெண்)

1.3.13.1. வயதெல்லைகள்

- 17 ற்குக் கீழ் - (14 வருடங்களுக்கு மேல் 17 வருடங்களுக்கு கீழ்)
- 20 ற்குக் கீழ் - (17 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்)

1.3.13.2. ஒரு அணியில் இருக்கக் கூடிய ஆகக் கூடிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 7 மற்றும் ஆகக் குறைந்த எண்ணிக்கை 4 ஆகும்.

1.3.13.3. இரு பாடசாலைகளிடையே நடைபெறும் போட்டியொன்று இரு ஒற்றையர் போட்டிகள் மற்றும் ஒரு இரட்டையர் போட்டியைக் கொண்டிருக்கும். ஒற்றையர் போட்டிகளின் வெற்றி இரண்டு அணிகளுக்கும் சமமாக பகிரப்பட்டால் மாத்திரம் இரட்டையர் போட்டி விளையாடப்படும்.
அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒற்றையர் போட்டியில் விளையாடிய போட்டியாளர்கள் இரட்டையர் போட்டியில் கலந்து கொள்ளமுடியாது.

1.3.13.4. அனைத்து போட்டிகளும் 30 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதுடன் 8 போர்ட்கள் விளையாடப்படும். அந்த 30 நிமிடங்கள் விளையாடி அதிகூடிய புள்ளிகளைப் பெறும் போட்டியாளர் அல்லது 30 நிமிடங்கள் நிறைவடைய முன்னர் 8 போர்ட்களை விளையாடி அதிக புள்ளிகளைப் பெறும் போட்டியாளர் வெற்றி பெறுவார்.

1.3.13.5. மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெறும் அணிகள் தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

### 1.3.14. ஜிம்னாஸ்டிக் (ஆண் / பெண்)

1.3.14.1 வயதெல்லைகள்

- 14 ற்குக் கீழ்- (12 வருடங்களுக்கு மேல்.14 வருடங்களுக்கு கீழ்) - ஆண் / பெண்
- 16 ற்குக் கீழ்- (14 வருடங்களுக்கு மேல் 16 வருடங்களுக்கு கீழ்) - ஆண் / பெண்
- 18 ற்குக் கீழ்- (16 வருடங்களுக்கு மேல் 18 வருடங்களுக்கு கீழ்) - ஆண் / பெண்
- 20 ற்குக் கீழ்- (18 வருடங்களுக்கு மேல் 20 வருடங்களுக்கு கீழ்) - ஆண் / பெண்

1.3.14.2. நடைபெறும் போட்டிகள்

| வயதெல்லைகள் | போட்டி நிகழ்ச்சிகள் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 14 ற்குக் கீழ், 16 ற்குக் கீழ், 18 ற்குக் கீழ் | பூமி உடற்பயிற்சி<br>கோலூன்றிப் பாய்தல் (vault)<br>நிலையான மோதிரம்<br>குறுக்குத் கம்பங்கள்<br>சமாந்தர கம்பம்<br>உடவியுடனான குதிரை | பூமி உடற்பயிற்சி<br>சமனற்ற கம்பம்<br>சமநிலை கற்றை<br>கோலூன்றிப் பாய்தல் (vault) |

1.3.14.3. ஒரு வீரர் அல்லது வீராங்கனை சகல போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம்.

1.3.14.4. ஒரு போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து இரண்டு போட்டியாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

1.3.14.5. சர்வதேச ஜிம்னாஸ்டிக் போட்டி விதிமுறைகளுக்கமைய போட்டிகள் நடைபெறும்.

1.3.14.6. மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்றுக் கொள்ளும் போட்டியாளர்கள் தேசிய மட்ட போட்டியில் கலந்து கொள்ளலாம்.

## 1.3.15. ஏரோபிக் ஜிம்னாஸ்டிக்(ஆண் / பெண்)

1.3.15.1. வயதெல்லைகள்

| வயதெல்லை | போட்டியிடக்கூடிய காலம் |
